சார்பு நீதிமன்றம், சங்ககிரி
முன்னிலை:- திரு.N. பன்னீர்செல்வம், B.A., B.L.,
சார்பு நீதிபதி, சங்ககிரி
2026-ம் வருடம் மார்ச் மாதம் 30-ம் நாள் திங்கட்கிழமை
(திருவள்ளுவராண்டு, 2057, விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 16-ம் நாள்)
அசல் வழக்கு எண்.41/2026
(CNR No. TNSA070001242026)

கனரா வங்கி கொங்கணாபுரம் கிளை சார்பாக அதன்
கிளை மேலாளர் மற்றும் பொது அதிகார முகவர் ..வாதி

//இடையே//

1. M/s. கருப்பசாமி JLG-க்காக அதன் தலைவர் மற்றும் செயலாளர் நதியா
2. கோமதி, தலைவர் மற்றும் உறுப்பினர் M/s. கருப்பசாமி JLG
3. நதியா, செயலாளர் மற்றும் உறுப்பினர் M/s. கருப்பசாமி JLG
4. தாமரை
5. தாமரைசெல்வி
6. செல்வமணி
( 2 முதல் 6 பிரதிவாதிகள் M/s. கருப்பசாமி JLG ன் உறுப்பினர்கள்)

.. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 23.03.2026-ம் தேதியன்று என் முன்னால் விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் R. அருள்பிரகாஷ், K.S. செல்வராஜா, M. அமுதினி, C.S. கௌதம்பிரசாத், A. ஜெயசிவா, K.C. ஆர்த்தி ஆகியோர்கள முன்னிலையாகியும் பிரதிவாதிகள் வழக்கில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், வாய்தா தேதியில் அழைத்தும் ஆஜராகாததால், பிரதிவாதிகளை தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களையும், விசாரிக்கப்பட்ட சாட்சியின் சாட்சியத்தையும் பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

//தீர்ப்புரை//

இவ்வழக்கானது வாதி வங்கிக்கு பிரதிவாதி கடன் தொகை ரூ.1,76,516/- மும் அதற்கு பின்வட்டி ஆண்டொன்றுக்கு 10.50% மற்றும் 2% அபராத வட்டி தாவா தாக்கலான நாளில் இருந்து தாவா தொகை செலுத்தும் வரையில் கணக்கிட்டு தாவா

செலவுத் தொகையுடன் சேர்த்து செலுத்தவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:-

2 முதல் 6 பிரதிவாதிகள் M/s. கருப்பசாமி JLG என்ற சுய உதவி குழு அமைத்து மேற்படி சுய உதவி குழுவிற்கு தலைவராக 2ம் பிரதிவாதியும், செயலாளராக 3ம் பிரதிவாதியும், 4 முதல் 6 பிரதிவாதிகள் மேற்படி சுய உதவிக்குழுவில் உறுப்பினர்களாகவும் சேர்த்து 1வது பிரதிவாதியின் பெயரில் 10.11.2017ம் தேதியன்று மகளிர் சுய உதவி குழு கடன் கோரி வாதி வங்கியில் மனு கொடுத்தனர். மேற்படி மனுவை பரிசீலனை செய்த வாதி வங்கி அதிகாரிகள் அன்றைய தேதியில் ரூ.2,50,000/- கடன் வழங்க அனுமதி அளித்தனர்.

மேற்படி கடனுக்காக 2 முதல் 6 பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு Articles of Agreement for financing joint liability Group and Inter-Se agreement மற்றும் Security ஆவணங்கள் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தனர். பின்னிட்டு மேற்படி கடனுக்கு ஆண்டொன்றுக்கு 10% வட்டியுடன் 48 மாதங்களில் திருப்பி செலுத்துவதாக உறுதி அளித்து வாதி வங்கி ஆவணங்களில் கையொப்பம் மற்றும் ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தனர். பின்னிட்டு பிரதிவாதிகள் ஒப்புக் கொண்டபடி கடனை திரும்ப செலுத்த வாதி வங்கி கோரியதை அடுத்து பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகைகளை ஒப்புக் கொண்டு கடந்த 08.11.2020 மற்றும் 06.11.2023 ஆகிய தேதிகளில் வாதி வங்கிக்கு கடன் உயிர்ப்பிப்பு கடிதம் எழுதி கொடுத்தனர்.

பின்னிட்டு வாதி வங்கி பலமுறை பிரதிவாதிகளிடம் நேரில் கேட்டும் மற்றும் அறிவிப்பு மூலம் கடனை திரும்ப செலுத்த கேட்டும் பிரதிவாதிகள் வாதி வங்கியில் பெற்ற கடனை திரும்ப செலுத்தவில்லை. வாதி வங்கியால் பராமரித்து வரும் கணக்குகளின் படி பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகை ரூ.1,76,516/- ஆகும். அதனால் பிரதிவாதிகள் வாதி வங்கியிடம் பெற்ற கடன் தொகையை வட்டியுடன் வசூல் செய்ய வேண்டி வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பிறகு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பி, அதனை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டு' வாய்தா தேதியில் பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் பிரதிவாதிகள் ஆஜராகாததால் பிரதிவாதிகள் இவ்வழக்கை பொறுத்தவரையில் தோன்றாத்தரப்பினர்களாக கருதி ஒருதரப்பாக்கப்பட்டனர்.

3. <u>பிரச்சனை</u>:-

இவ்வழக்கில் வாதி கோரியபடி பரிகாரம் பெற உரியவரா?இல்லையா? என்பது தான் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

4. <u>தீர்வு</u>:-

இத்தாவாவில் வாதி வங்கி தரப்பில், வாதி வங்கியின் கிளைமேலாளர் அகிலன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இத்தாவாவில் வாதி வங்கி தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளை மெய்பிக்கும் பொருட்டு வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வாதி வங்கியின் கிளை மேலாளர் அகிலன் என்பவர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வழக்குரை சங்கதிகளை ஒட்டி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வாதி வங்கியின் தரப்பில் கிளை அலுவலருக்கு வழங்கியுள்ள பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ.1 ஆகவும், M/s.கருப்பசாமி JLG கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.2 ஆகவும், கடன் அனுமதி கடிதம் வா.சா.ஆ.3 ஆகவும், பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த சுய உதவி குழு கடன் அடமான ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.4 ஆகவும், 10.11.2017-ம் தேதியிட்ட பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த Inter-Se loan Agreement வா.சா.ஆ.5 ஆகவும், 08.11.2020-ம் தேதியிட்ட பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ.6 ஆகவும், 06..1.2023-ம் தேதியிட்ட பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் வா.சா.ஆ.7 ஆகவும், கணக்கு பட்டியல் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதி தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை மறுத்துரைக்கும் விதமாக குறுக்கு

விசாரணை செய்ய பிரதிவாதிகள் முன் வராமல் தோன்றாத்தரப்பினர்களாக இருந்து வருகிறார்கள். அதனால் வாதி வங்கியிடம் இருந்து பிரதிவாதிகள் கடனை வாங்கிவிட்டு அதனை உரிய வட்டியுடன் திரும்ப செலுத்தாமல் இருந்து வருவது உண்மைதான் என தெரிய வருகிறது. மேற்படி சாட்சியின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வாதி தன் மீதுள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்த்துள்ளதால், வாதி தாவாவில் கோரியபடி பரிகாரம் பெற உரியவர் என இவ்வழக்கின் பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

6. முடிவு:-

இறுதியாக வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தாவா தொகையான ரூ.1,76,516/-மும் அதற்கு பின்வட்டி தாவா தாக்கலான தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 % மும் , பின்னிட்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து முழுதொகையும் செலுத்தி முடிக்கப்படும் தேதி வரையில் 6 % மும் சேர்த்து செலவு தொகையுடன் செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகையை வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் செலுத்த இரண்டு மாதங்கள் கால அவகாசம் அளித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026–ஆண்டு மார்ச் மாதம் 30–ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANNEERSELVAM N

Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.30 17:26:03 +0530

சார்பு நீதிபதி
சங்ககிரி

1. வாதி தரப்பு சாட்சி:–

வா.சா.1 – அகிலன், த/பெ. பாலன் (வாதி)

2. வாதி தரப்பு சான்றாவணங்கள்:–

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.04.2021 | வாதி வங்கியின் தரப்பில் கிளை மேலாளருக்கு வழங்கியுள்ள பொது அதிகார ஆவணம் | /சான்றிட்ட நகல்/ |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2 | 10.11.2017 | M/s. கருப்பசாமி JLG கடன் விண்ணப்பம் | /அசல்/ |
| வா.சா.ஆ.3 | 10.11.2017 | கடன் அனுமதி கடிதம் (Sanction Letter) | /அசல்/ |
| வா.சா.ஆ.4 | 10.11.2017 | பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த சுய உதவி குழு கடன் அடமான ஒப்பந்த பத்திரம் | /அசல்/ |
| வா.சா.ஆ.5 | 10.11.2017 | பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த Inter-Se Loan Agreement | /அசல்/ |
| வா.சா.ஆ.6 | 08.11.2020 | பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் | /அசல்/ |
| வா.சா.ஆ.7 | 06.11.2023 | பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் | /அசல்/ |
| வா.சா.ஆ.8 | 04.12.2025 | கணக்கு பட்டியல் | /உண்மை நகல்/ |

3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை.

PANNEERSELVAM N

Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.30 17:25:54 +0530

சார்பு நீதிபதி
சங்ககிரி